SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 50. TML1189 - ஆர்.சூடாமணியின் சிறுகதைகளில் பெண்ணியச் சிந்தனைகள்

சி.கோவர்த்தனா,
முனைவர்பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்),
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, அரசு ஆடவர் கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி – 635 001.

## முன்னுரை

ஆர். சூடாமணி ஜனவரி 10. 1931இல் ராகவன் கனகவல்லி இணையருக்குப் பிறந்தார். தந்தை ராகவன் அப்போது சென்னை மாகாணத்தின் தலைமைச் செயலராக இருந்தார். இவரின் தாயார் கனகவல்லி சிற்பம் மற்றும் ஓவியத்தில் ஈடுபாடு மிக்கவர். சூடாமணியோடு பிறந்தவர்கள் மூன்று சகோதரிகள் ஒரு சகோதரன் ஆவர். சூடாமணிக்கு ஐந்தாம் வயதில் அம்மை நோய்த் தாக்கியது. பல கட்ட சிகிச்சைகளுக்குப் பிறகு மரணத்திற்கு மிக அருகில் சென்று மீண்டு வந்தாலும் இயல்பான உடல் வளர்ச்சி தடைப்பட்டது. ஆகவே பள்ளிக்குச் செல்லாமல் வீட்டிலேயே கல்விக் கற்றார். ஏராளமாக வாசிக்கும் பழக்கம் கொண்ட இவர் வீட்டின் நான்கு சுவர்களுக்குள் தம் உலகை அமைத்துக் கொண்டவர். ஒரு சில நாவல்களை அவர் எழுதியிருந்தாலும், சிறுகதைகள் தான் அவரைப் பிரபல எழுத்தாளராக அடையாளம் காட்டின.

## இலக்கிய வாழ்க்கை

எழுத்தாளர் ஆர். சூடாமணி தமிழ் இலக்கிய உலகில் ஒரு முக்கியப் படைப்பாளர் ஆவார். 1954இல் தொடங்கிய அவரது எழுத்துப்பயணம் 2004 ஆம் ஆண்டு வரை நீடித்திருந்தது. தனது 23ம் வயதில் எழுதத் தொடங்கிய இவர் கலைமகள், கல்கி, ஆனந்த விகடன், சுதேசமித்திரன், கணையாழி என்று பல பத்திரிகைகளில் எழுதி இருக்கிறார்.

தமிழில் கதைகளையும், நாவல்களையும் எழுதியவர். கலைமகள் இதழை மையமாகக் கொண்டு உருவாகி வந்த பெண் எழுத்தாளர்களில் ஒருவர். மரபான பார்வையில் பெண் விடுதலையையும், சமூக உறவுகளின் நுட்பங்களையும், ஒழுக்க அற நெறிகளையும் பேசியவர்.

சூடாமணியின் பெரும்பான்மையான கதைகள் குடும்பம் சார்ந்தவை. கதை மாந்தரின் உள நிகழ்வுகளை வெவ்வேறு கோணத்தில் பெண்களின் உரிமை, விடுதலை ஆகியவற்றைப் பற்றி பேசினாலும், அவர் பெண்ணியக் கொள்கைகள் எதையும் முன் வைக்கவில்லை. இருந்தபோதிலும் இவைகள் பெண்ணியச் சிந்தனைகளாக மதிப்பிடக் கூடியவை என்று கூறினால் மிகையாகாது.

## கொண்டாட மறந்த தேவதை

தமிழ் இலக்கிய உலகில் பெண்களின் பல்வேறு சிக்கல்களையும், மனப்போராட்டங்களையும் மிகவும் நுட்பமாக தனது எழுத்துக்கள் வாயிலாக வெளிப்படுத்தியவர் ஆர்.சூடாமணி ஆவார். இவரின் படைப்புகள் பெரிய அளவில் மக்களிடையே பேசபடாமல் போனது வியப்பாக இருக்கிறது. எழுத்தாளரும் விமர்சகருமான சு.வேணுகோபால் சூடாமணி' தமிழ் இலக்கியத்தில் கொண்டாட மறந்த தேவதை ‘என்று குறிப்பிடுகிறார்.[ பத்திரிகைச் செய்தி ஜூன் 2021]

பொதுவாசிப்புக்குரிய சராசரி கதைகள் எழுதியிருந்தாலும் அவர் எழுதிய 600க்கும் மேற்பட்ட கதைகளில் 100 கதைகளை இலக்கியத் தகுதி கொண்டவை என்று சொல்ல முடியும் என்றும், இது தமிழில் எழுதிய பல இலக்கிய விதிகளின் பங்களிப்பை விட மிகுதி என்றும் சொல்கிறார். எதிர்மறைப் பண்புகளின் வெளிப்பாடுகளை இலக்கியத்தில் எதிர்பார்க்கும் நவீனத்துவப் பார்வையில் சூடாமணி புறக்கணிக்கப்பட்டார் என்றும், அவர் மானுட உள்ளத்தின் கனிவையும், அறத்தையும் எழுதியவர் என்றும், தாய்மையின் உள நிலைகளை மிகச் சிறப்பாக வெளிப்படுத்தியவர் என்றும் கருதுகிறார்.

**பண்பாட்டு மதிப்புகள்**

*ஒவ்வொரு சமுதாயமும் தனக்கெனத் தனியான பண்பாட்டினைக் கொண்டிருக்கிறது. தனி மனிதர்களாகத் தீவு போன்று வாழ முடியாது. பெண்கள் இணைந்து உன்னதமான வாழ்க்கை வாழ்வதற்கு அடிப்படையாக அமையும் வாழ்வியல் நெறிகள் பண்பாட்டு மதிப்புகள் ஆகும்.*

பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல் [கலி.133]

*என்றும்*

பண்புடையார் பட்டுண்டு உலகம் [ குறள் 996 ]

*என்றும், இலக்கியங்கள் பண்பாட்டின் சிறப்பைக் காட்டுகின்றன.*

**பெண் கல்வி**

*ரூசோ போன்ற பேரறிஞர்களும் காந்தி போன்ற பெரும் தலைவர்களும் பெண் கல்வி என்பது ஆண்களது தேவைகளை நிறைவு செய்யும் வகையில் அமைதல் வேண்டும் என்று கருதினர். தத்துவம், அறிவியல் படிப்புகள் எல்லாம் பெண்களுக்குத் தேவை இல்லை. சமயம், நல்லொழுக்கம், இல்லற முன்னேற்றம் இவைகளுக்கான படிப்பே பெண்களுக்குப் போதுமானது என்று நினைத்தனர். ஆனால் பாரதியாரோ, பெண்கள் எல்லாத் துறையிலும் வல்லவராக விளங்க வேண்டும். எனவே அவர்களுக்கென்று தனிக் கல்வி தேவையில்லை என்று நினைத்தார். எனவே பெண்களைப் புதுமைப் பெண்களாக படைத்துக் காட்டும் போது*

சாத்திரங்கள் பல பல கற்பாறாம்;
சவுரியங்கள் பல பல செய்வாராம்;
மூத்த பொய்கைகள் யாவும் அளிப்பாராம்;
மூடக்கட்டுகள் யாவும் தகர்ப்பாராம்; [பா. கவிதைகள் 545]

*என்று பாடுகிறார்.*

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்
புவிப்பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர்
நல்ல மாதர் அறிவைக் கெடுத்தார் [.பா .க .பக் 538]

*ஆணுக்கு சமமான கல்வி திறமை பெண்களுக்குப் பொதுப்படையாக ஏற்படும் வரை ஆண் மக்கள் பெண் மக்களைத் தக்கபடி மதிக்க மாட்டார்கள். தாழ்வாகவே நடத்துவார்கள் என்று கூறுகிறார். அதாவது கல்வியில் சமத்துவம் இல்லாவிட்டால் மீண்டும் ஏற்றத்தாழ்வே ஏற்படும் என்று கூறும் பாரதியாரின் கருத்தும் இக்காலப் படைப்பாளரான ஆர். சூடாமணியின் பெண் சுதந்திரத்திற்கான முன்னேற்றப் படைப்புகளும் ஒரே கருத்தை முன்மொழிவதாக அமைந்துள்ளதைக் காண முடிகிறது.*

**பெண்கள் நிலை**

*பெண்கள் மீது திணிக்கப்பட்டுள்ள மரபுக் கருத்துக்களின் வாயிலாக பெண்ணை உயர்த்துகின்ற, அதே வேளையில் பெண் தன்னிச்சையாக தனித்துவத்துடன் இயங்குவதற்குத் தடைக்கல்லாகி, பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். சமுதாயம் தன் மீது ஏற்றியுள்ள மரபு மதிப்புகளைக் காப்பதற்காகப் பெண் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டு தன் சுய விருப்பு வெறுப்புகளை உள் மறைத்து சமுதாயத்தில் ஒரு கல்லாக உலா வர வேண்டி உள்ளது. பெண்ணின் இத்தகைய சூழல்களை எதிர்கொள்ள ஏதுவாக நவீன படைப்பாளர்கள் பலரும் பெண் சுதந்திரத்தை பற்றியக் கருத்துக்களை முன் வைப்பதாக பல்வேறு படைப்புகளை படைத்துள்ளதில் ஆர். சூடாமணி அவர்களும் இதில் மிகப்பெரிய பங்காற்றியது போற்றுதலுக்குரியதாக உள்ளது.*

*ஒவ்வொரு கதையிலும் ஒரு புதிய பார்வையை புதிய கோணத்தை முன் வைக்கிறார் சூடாமணி. மானிட வாழ்வின் எல்லா அம்சங்களையும் பதிவு செய்யும் இக்கதைகளின் வழியே படைப்பாளியின் ஆளுமை பிரம்மிப்பூட்டுவதாக உள்ளது.*

*அன்பை விட நியாய உணர்வு பெரிது; முக்கியமானது. ஆர். சூடாமணி இக்கருத்தை தமது சிறுகதைகளில் பலமுறைப் பதிவு செய்துள்ளார். சூடாமணியின் கதாபாத்திரங்கள் எல்லாருமே நல்லவர்களோ, நியாய உணர்வு படைத்தவர்களோ அன்பை பெருக்குபவர்களோ அல்ல. சூடாமணி அவர்களை முழுமையான அன்புப்பார்வையால் பார்க்கிறார். நிறை குறைகளுடன் ஏற்கிறார். நிம்மதிக்கும் மகிழ்ச்சிக்கும் அதுவே வழி என்று கூறாமல் கூறுகிறார். நுட்பமான உணர்வுகள், விஷயங்கள், மனோதத்துவங்கள் என்ற சவாலான பக்கத்தில் நுழைந்து பிரமிப்பை ஏற்படுத்தியுள்ளதை அவரின் சிறுகதைகள் தெளிவாக்குகின்றன.*

*வாழ்க்கை வேகத்தில் நாம் தவறவிடும் ஆழம், அழுக்கு, ஆச்சரியம், அவலம் என்ற பலவற்றை நோக்கமாக கொண்டுள்ளன இவரது படைப்புகள். அவரின் சிறுகதைகளில் இயல்பாக அமைந்த உளவியல் பார்வை குறிப்பாக, குழந்தைகளின் உளவியலை தராசுப் பார்வையுடன் கவனித்துப் பதிவு செய்துள்ளார். அவர்களின் மெல்லுணர்வுகள் நசுக்கப்படுவதையும்,ஒரு குழந்தை மற்றொரு குழந்தையின் பால் ஏவி விடக்கூடிய வன்முறையின் சாத்தியத்தையும் எழுதியுள்ளார்.*

*மாற்றுத்திறனாளிகள், நிராகரிப்புக்கு ஆளானவர்கள், தனிமைப்பட்டுப் போனவர்கள், மனநோயாளிகள், விளிம்பு நிலை மனிதர்கள் என்று பல்வேறு வகையினரின் வாழ்க்கைச் சூழலையும், உளவியல் போராட்டங்களையும் முன்வைக்கிறார். ஒரு குறிப்பிட்ட தளத்தில் தன்னை வரையறுத்துக் கொள்ளவில்லை சூடாமணி. அவரது படைப்பூக்கம் எல்லா தளங்களையும் அசைத்துப் பார்ப்பதாக உள்ளது.*

**பெண் சுதந்திரம்**

*எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பிள்ளை காண்' என்ற பாரதியாரின் கூற்றுப்படி, பெண்களுக்கான சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்கி சமுதாயத்தில் பெண்கள் போற்றப்பட வேண்டும். பெண்மை போற்றப்படும் போது சமுதாயம் மேன்மையுறும். பெண் தன்னுடைய தனித்துவத்தை இழக்காது வாழ வேண்டும் என்பது போன்ற பெண்ணியப் போற்றுதல்களை வழிமொழிவதாக சூடாமணியின் சிறுகதைகள் படைக்கப்பட்டுள்ளன. தன்னைத்தானே உணர்ந்து கொள்ளுதல், தன் நெஞ் சிற்கு சரியாக தோன்றுவதை நேர்மையுடனும் துணிவுடனும் சொல்வதும், செயல்படுத்துவதும் என்ற நோக்கில் சூடாமணியின் சிறுகதைகளில் பெண் சுதந்திரம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.*

*சூடாமணியின் பெண் சுதந்திரம் என்பது ஆண்களை எதிர்ப்பதாகவோ, தூற்றுவதாகவோ அமைக்கப்படவில்லை. இவர் தன் கதைகளில் பெண்களின் சுதந்திரத்தை அதற்கே உரிய மென்மையுடனும் கண்ணியத்துடனும் வெளிப்படுத்தி இருக்கிறார்.*

*பெண் விடுதலை முதலில் வீட்டில் பெண்ணாலேயே ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அமைதியாக ஆனால், ஆணித்தரமாக வெளிப்படுத்தியுள்ளார். ஆண்களுடன் அனுசரித்து போவதும் பெண்கள் சுதந்திரமாக இருப்பதும் அவர்கள் மனது மட்டும் சூழல் பொருத்தது என்பதை சூடாமணி ஒவ்வொரு கதையிலும் மௌனமாக உரைத்த வண்ணம் இருப்பது அவரின் தனித்துவத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.*

**பெண்ணியச் சிக்கல்கள்**

*தாய் தந்தையரை இழந்த பின்பு கால் தனது பயனை இழந்த நிலையில் , தங்கை வள்ளி தனது 18 வயதில் வீட்டை விட்டு வெளியேறுகிறாள். மீண்டும் சில வருடங்களுக்குப் பிறகு வயது முதிர்ந்த நிலையில் தன் அண்ணன் மாணிக்கத்தைக் காண வருகிறாள்.'*

*உனக்கு நான் ஒரு சுமையா இருந்து விடக் கூடாது என்று தான் ஓடிப் போனேன் மாணிக்கம்'[ ப.53] [ தனிமைத் தளிர் ]*

*என்று வள்ளி கூற,*

*உன்னை போன்ற அருமையான தங்கை யாருக்கும் கிடைக்க மாட்டாள் வள்ளி' என்று மாணிக்கம் கலங்கினான்.*

*நான் செய்தது உனக்காக அல்ல எனக்காகவே தான் செய்தேன்." ஒரு சுமையாகவும் தடையாகவும் கருதப்படுவதை நான் விரும்பவில்லை. உன்னை விட்டு நான் விலகிய செயல் தங்கையின் தியாகம் என்பதை விட என் தன்மான உணர்வின் எதிரொலி என்பது தான் உண்மை".[ பக்கம் 58][ தனிமைத் தளிர்]. என்று பதில் அளித்த வள்ளி என்ற பெண் பாத்திரப்படைப்பு தன் சுதந்திரத்தை உரிமையோடு வெளிப்படுத்திய விதம் வியக்கக் கூடியதாக அமைந்துள்ளது.*

*நான்காம் ஆசிரமம் என்ற இக்கதையில் முதல் கணவன் லுகிமியா என்ற நோயால் இறக்க, விதவையை மணம் புரிந்து விவாகரத்து செய்த இரண்டாம் கணவனுக்கும், உடன் வாழ்ந்த மூன்றாம் கணவனுக்கும் இடையில் நடக்கும் உரையாடலாக இக்கதை அமைந்துள்ளது.*

*அவள் ஒவ்வொரு உறவையும் வாழ்ந்து களைத்து அதிலிருந்து விடுபட்டுண்டு வெளிவந்துட்டாள். [ ப.192 தனிமைத் தளிர் ]*

*'என்னால அவளைப் பிரிய முடியாம அதீத பற்றுதலும், பேராசையும் என் கண்களை மறைத்துடுத்து' என்னும் ப்ரொபசர் அவள் விரும்பிய விடுதலையில், நான்காவது ஆசிரமத்தில் நான் வாழ அனுமதிக்கவில்லை என்கிறார். அவள் விரிவு, அவள் முழுமை, அவள் பெருக்கம் அவைகளைப் பிறப்புரிமையாகக் கேட்கும் முதிர்ச்சி அல்லவா அவளுடையது.[ ப. 180 தனிமைத் தளிர்]*

*தன்னிச்சையாய் வாழ விரும்புகிறேன் இதுவரை பந்தத்தில், துணையில் நான் அடைய வேண்டிய பக்குவத்தை எல்லாம் அடைஞ்சிட்டேன். இனிமேல் என் சுதந்திரம் தனிமையில் தான் முழுமை பெற முடியும். என்னை நான் அரைகுறையாய் நிறுத்திக்க முடியாது.[ ப.191 தனிமைத் தளிர்]*

*அவள் ஒரு சுதந்திரப் பிறவி. அவளை எதுவும் கட்டுப்படுத்தி வைக்க முடியாது இதிலிருந்து தப்பிக்கும் வழியை அவள் அறிவாள். முதல் மூன்று ஆசிரமங்களில் அடைய வேண்டியவைகளை அடைந்து முடித்து விட்டாள் சங்கரி. நான்காவது வழி மறுக்கப்பட்டபோது தானே தேடிக் கொள்கிறாள். தானாக மட்டும் இருப்பதில் தான் யாரும் தன் உண்மையான மோட்சத்தை காண முடியும் என்பதை சங்கரி மூலம் அழுத்தமாக வெளிப்படுத்தியுள்ளார் படைப்பாளர் சூடாமணி.*

**முடிவுரை**

*சூடாமணியின் சிறுகதைகள் பெரும்பாலும் பெண்களின் முன்னேற்றம், பெண்விடுதலை, பெண்களின் உரிமை ஆகியவற்றையே பேசுகின்றன. பெண்களை முதன்மைப்படுத்தி எழுத்தப்பட்டிருந்தாலும் ஆண்களும் பெண்களை மதிக்கவேண்டும் என்கிற கருத்தை தகுந்த இடங்களில் வெளிப்படுத்துகிறார். கல்வி, உத்தியோகம் பொருளாதாரத் தன்னிறைவு வாய்ப்புகள் போன்றவற்றில் பெண்களின் நிலை முன்னேறி இருந்தாலும் அவர்களை அடிமைகளாகக் கருதும் எண்ணம் ஆண்களின் அடி மனதில் இன்னும் விலகவில்லை என்றே தோன்றுகிறது. பெண்ணை உடைமைப் பொருள் ஆகவும் போக பொருளாகவுமே பெரும்பாலும் காண்கிறார்கள். உடலளவில் பெண் மெலிந்தவள் என்பதால் உயிரோடு எரித்தல் கற்பழிப்பு போன்ற கொடூரங்கள் நிகழ்கின்றன.*

*திருமணமாகாத பெண் வாழ்க்கையில் தோல்வி அடைந்தவள் என்று கருதுவதை விட பெண்ணுக்குச் சிறுமை வேறு இல்லை. பெண்ணுக்கு திருமணம் அத்தியாவசியம் என்று நினைப்பதால் தான் வரதட்சனை கொடுமை சமூகத்தில் வேரூன்றி விட்டது. பெண் கொலையும் பெண் சிசுக்கொலையும் அதன் உச்சங்களே ஆகும். ஆண் பெண் சமத்துவக் கருத்தை துவக்கத்திலிருந்தே வீட்டிலும் பள்ளியிலும் எல்லா குழந்தைகளுக்கும் பயிற்றுவித்தல் அவசியம். அப்போதுதான் பெண்ணை சக மனுஷியாய் மதித்து மரியாதையுடன் நடத்தும் பழக்கம் ஆணுக்கு இயல்பாய் ஏற்படும். சமூக மாற்றம் நிகழ வழி பிறக்கும்.*

**பயன்பட்ட நூல்கள்**


1. பாரதியார் கவிதைகள்– திருமகள் நிலையம்/ விசா பப்ளிகேஷன்ஸ் சென்னை
2. தனிமைத் தளிர் ஆர் சூடாமணி காலச்சுவடு பதிப்பகம். நாகர்கோவில்
3. இன்னொரு முறை கவிதா பப்ளிகேஷன், 8 மாசிலாமணி தெரு, பாண்டி பஜார்,தியாகராய நகர் சென்னை 600017
4. திருக்குறள் கலைஞர் உரை – பூம்புகார் பதிப்பகம் சென்னை. 2010
5. முனைவர் ச. முத்துச் சிதம்பரம் பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும் – முத்துப்பதிப்பகம், விழுப்புரம் – 605602 முதல்பதிப்பு 2005
6. கலித்தொகை – டாக்டர் மா.இராசமாணிக்கனார் பூம்புகார் பதிப்பகம் சென்னை–108. ஆகஸ்டு2011